**<u>மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், நத்தம்.</u>**

| | | | |
|---|---|---|---|
| அ.வ.எண். | : 2/2024 | வா.சா. | : 1 |
| பெயர் | : சாதிக்பாட்சா | த/பெ. | : காதர்ஷா |
| தாலுகா | : நத்தம் | கிராமம் | : முஸ்லீம் கிழக்கு தெரு |
| தேதி | : 30.06.2025 | வயது | : 57/2025 |

1969-ம் வருடத்திய வகைமுறைச்சட்டம் பிரிவு .44-ன் படி சாட்சி அழைக்கப்பட்டு உறுதியுரை செய்யப்பட்டு அளித்த சாட்சியம்:

**<u>பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

2) ஏற்கனவே இதே வழக்குச் சொத்தை பொறுத்து இதே பிரதிவாதிகள் மீது இதே நீதிமன்றத்தில் அ.வ.எண்.85/2015 என்ற வழக்கை தாக்கல் செய்தேன் என்றால் சரிதான். அந்த பிராதின் அலுவலக நகலை வா.சா.ஆ.9 வது இலக்க ஆவணமாக தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். மேற்படி வழக்கில் விளம்புகை பரிகாரமும், நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரமும் கோரியிருந்தேன் என்றால் சரிதான். தற்போது தாக்கல் செய்துள்ள இந்த வழக்கில் விளம்புகை பரிகாரம் கோரவில்லை என்றால் சரியல்ல. மேற்படி அ.வ.எண்.85/2015 வழக்கில் பிரதிவாதி தாக்கல் செய்த எதிர்வழக்குரையை இந்த வழக்கில் வா.சா.ஆ.10 ஆவணமாக தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான்.

3) மேற்படி எதிர்வழக்குரையில் சொத்தின் நான்குமால் தவறு என்றும், ஸ்தலத்தில் வழக்கில் கூறியுள்ள விஸ்தீரணம் இல்லை என்றும் எதிர்வாதம் செய்யப்பட்டது என்றால் சரிதான். அதேபோல், வழக்கு சொத்தின் வடபுறம் விரிச்சல் ஆறு என்ற கிழமேல் ஓடை உள்ளது என்றும், தாவா சர்வே எண்ணில் 10 செண்டிற்கு மேல் ஓடை பகுதியாக மாறிவிட்டது என்றும் எதிர்வாதம் செய்யப்பட்டது என்றால் சரிதான். மேற்படி

எதிர்வாதங்களை மறுத்து இந்த வழக்கை தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. எனது இடத்திற்கு அடுத்து அரசு புறம்போக்கு இடம் உள்ளது, அதை தாண்டி தான் ஓடை உள்ளது.

4) நான் தாக்கல் செய்துள்ள ஹிபா ஆவணம் வா.சா.ஆ.3 ல் தாவா சொத்திற்கு நான்குமால் காட்டடப்படவில்லை என்றால் சரிதான். மேற்படி வா.சா.ஆ.3 ஆவணத்தில் வழக்கு சொத்தில் கண்ட சர்வே எண்ணிற்கு தனிப்பட்ட முறையில் நான்குமால் காட்டப்படாமல், மொத்த 4 இலக்கச் சொத்துக்களுக்கும் சேர்த்து மொத்தம் 4 ஏக்கர், 17 செண்ட்டிற்கு நான்குமால் காட்டப்பட்டுள்ளது. தாவா சொத்திற்கு முந்தைய வழக்கில் காட்டப்பட்டுள்ள நான்குமாலும், தற்போதைய வழக்கில் காட்டப்பட்டுள்ள நான்குமாலும் வெவ்வேறானது என்றால் சரிதான்.

5) பிரதிவாதிகள் இந்த வழக்கிலும் வழக்குச் சொத்தின் விஸ்தீரணம் மற்றும் நான்குமால் தவறு என்று தான் எதிர்வாதம் செய்கிறார் என்றால் சரிதான். வழக்கு சொத்தின் நான்குமால் மற்றும் அமைப்பு ஆகியவற்றை பொறுத்து நிரூபணம் செய்ய நீதிமன்ற ஆணையர் நியமனம் கோரி மனு தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். ஏற்கனவே தாக்கல் செய்த அசல் வழக்கில் விபரங்கள் விடுபட்டுபோனதாக தெரிவித்து புது வழக்கு தாக்கல் செய்ய அனுமதி கோரி மனு தாக்கல் செய்தேன் என்றால் சரிதான். அந்த மனு இ.ம.எண்.304/2018 மீதான உத்தரவு வா.சா.ஆ.13 ஆக தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். அந்த உத்தரவானது 14.08.2019 ம் தேதி பிறப்பிக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த உத்தரவின் அடிப்படையில் 3 வருட காலத்திற்குள் அசல் வழக்கை தாக்கல் செய்யவேண்டும் என்றால் அந்த உத்தரவில் அவ்வாறு குறிப்பிட்ட

காலஅளவு நிர்ணயம் செய்யப்படவில்லை. நான் 3 வருட காலம் கடந்து, அதன்பிறகும் 1-/2 வருடம் கடந்த பிறகு தான் 08.01.2024 ம் தேதி வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். உத்தரவில் காலவரையறை நிர்ணயம் செய்யப்படவில்லை என்றாலும், வழக்கை 3 வருடத்திற்குள் தாக்கல் செய்யவேண்டும் என்றால் சரியல்ல. காலம் கடந்து தாக்கல் செய்துள்ள இந்த வழக்கு சட்டப்படி செல்லத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

6) நான், எனது பிராது பாரா 11 மற்றும் நிரூபண வாக்குமூலத்தில் பாரா 12 ல் கண்ட விபரங்கள் தவறானது என்றாலும், அவ்வாறு பிரதிவாதிகள் ஊர்பொது மனிதர்களிடம் வாதி உரிமையை மறுக்கவோ, சுவாதீனத்தை இடைஞ்சல் செய்யவோ மாட்டேன் என்று சொன்னதாக வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. பிரதிவாதிகள் ஊர்பொதுமக்கள் யார், யாரை சந்தித்தார்கள் என்றும், அவர்களது பெயர்களை குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். பிராது பாரா 12 ல் கண்ட விபரங்களான வழக்கு சொத்திலிருந்த மரங்களை பிரதிவாதிகள் மற்றும் அவரது மகன் 31.08.2023 ம் தேதி சட்டவிரோதமாக வெட்டி சேகர் என்பவரது லாரியில் கடத்தி சென்றுவிட்டதாக சொல்வது தவறானது என்றால் சரியல்ல, அது சம்பந்தமாக காவல் துறையில் புகார் கொடுக்கப்பட்டு பொய் புகார் என்பதால் அதன்மீது காவல்துறையினர் நடவடிக்கை எடுக்கவில்லை என்றால் சரியல்ல.

7) காவல்துறையினர் நடவடிக்கை எடுக்காததால் உயர் காவல்துறை அதிகாரிகளிடம் புகார் செய்யவோ, நீதிமன்றம் மூலமாக நடவடிக்கை எடுக்கவோ முயற்சி எடுக்கவில்லை என்றால், ஏற்கனவே சிவில் வழக்கு உள்ளதால் நீதிமன்றம் மூலம்

பரிகாரம் தேடிக்கொள்ளுமாறு காவல்துறையினர் தெரிவித்தனர். பாரா 13 ல் 30.12.2023 ம் தேதி பிரதிவாதிகள் வழக்கு சொத்தில் அத்துமீறி நுழைந்து ஆக்கிரமிப்பு செய்ய முற்பட்டதாக வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. அது சம்பந்தமாக பிரதிவாதிகள் மீது நான் நடவடிக்கை எடுக்கவில்லை என்றால் சரியல்ல, அதற்காக தான் தாவா வழக்கை தாக்கல் செய்துள்ளேன்.

8) நான் பிராதில் தெரிவித்துள்ளவாறு, 31.08.2023 மற்றும் 30.12.2023 தேதிகளில் எவ்வித சம்பவமும் நடைபெறவில்லை என்றாலும், அதனால் வழக்கிற்கான முகாந்திரம் எழவில்லை என்றாலும் சரியல்ல. நானோ, எனது தகப்பனாரோ வழக்கு சொத்தை எந்த காலத்திலும் அனுபவம் செய்யவில்லை என்றால் சரியல்ல. வழக்கு சொத்தை 1ம் பிரதிவாதியும், அவரது தகப்பனாரும் 50 ஆண்டுகளுக்கு மேலாக அனுபவம் செய்து வருகிறார்கள் என்றால் சரியல்ல. வழக்குச் சொத்தில் 1ம் பிரதிவாதி கூரை வீடு அமைத்து அனுபவம் செய்து வருகிறார் என்றால் சரியல்ல.

9) வழக்கு சொத்தில் 1ம் பிரதிவாதியின் தகப்பனார் காலத்திலேயே 12 மாமரங்கள் வைத்து அனுபவம் செய்து வரப்பட்டது என்றால் சரியல்ல. வறட்சியின் காரணமாக அந்த மாமரங்கள் பட்டுப்போய்விட்டது என்றால் சரியல்ல. தற்போது பிரதிவாதிகள் வழக்குச் சொத்தில் 20 தென்னை மரங்கள் நடவு செய்து அனுபவம் செய்து வருகிறார்கள் என்றால் சரியல்ல. வழக்கு சொத்தில் நான் அனுபவத்தில் இல்லாத நிலையிலும், பிரதிவாதிகள் கூரை வீடு அமைத்து அனுபவம் செய்து வரும் நிலையில் நான் கோரியுள்ள பரிகாரங்கள் எனக்கு கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. இவ்வழக்கில் கூறப்பட்டுள்ள வழக்கு மூலங்கள் உண்மையற்றவை என்பதால் நான் இந்த வழக்கை தாக்கல் செய்ய முகாந்திரம் இல்லை என்றால் சரியல்ல.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் என் முன்னிலையில் சொல்லப்பட்டு தட்டச்சரால் கணிணியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு பின்னர் சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு சாட்சி சரி என்று ஒப்புக் கொண்டு என் முன்னிலையில் 30.06.2025 கையெழுத்து செய்துள்ளார்.

J.Aafreen Begum

Digitally signed by J.Aafreen Begum
Date: 2025.06.30 16:44:44 +0530

மா.உ.ம.நீ.நடுவர், நத்தம்.